# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

# 2013

ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව -මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය

தேசியதிட்டமிடல் திணைக்களம - நிதிதிட்டமிடல் அமைச்சு

Department of National Planning – Ministry of Finance and Planning

# தேசிய திட்டமிடல் திணைக்களம்

1. திணைக்களத்தின் தூரநோக்கு,செயற்பணி,தொழிற்பாடுகள், பொறுப்புக்கள் 2

2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள் 2

3. துறை வாரியான செயலாற்றுகை 3

3.1 விவசாயம் நீர்ப்பாசணம் மற்றும் காணி 3

3.2 பொது வசதிகள் 7

3.3 வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து, தகவல் தொடர்பு, தபால் மற்றும் தொலைத் தொடர்பு 10

3.4 கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் பெருந்தோட்டம் 14

3.5 கலை, மதங்கள், தேசிய நல்லிணக்கம், விளையாட்டு, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி 16

3.6 கல்வி மற்றும் சுகாதாரம் 18

3.7 சுற்றாடல், தொழிநுட்பம், ஆராய்ச்சி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை 21

3.8 பேரண்ட பொருளாதாரம், சமூக பாதுகாப்பு, தொழில் மற்றும் சிறைச்சாலைகள் 24

3.9 பொது முகாமைத்துவம 26

4. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம 27

5. மனி

த வள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம 28

6. நிதிச் செயலாற்றுகை 38

1. **திணைக்களத்தின் பணிக்கூற்று, தூரநோக்கு, தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்**

**பணிக்கூற்று**

சிறப்பான திட்டமிடலினூடாக இலங்கையை ஆசியாவின் ஆச்சரிமாக உருவாக்குதல்

**தூர நோக்கு**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அனுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில்வல்லமையை பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- நீண்டகால, நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது துறைவாரியான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரிப்பதில் உதவி செய்தல்

- பேரண்ட பொருளாதார சட்டகம் மற்றம் உபாயங்களை அபிவிருத்தி செய்தல்

- பொருளாதார அபிவிருத்திக் கொள்கைளள், உபாயங்கள், மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்தல்

- வரிசை நிறுவகங்களினால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல்

- மூலதன வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் தொழிநுட்ப உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுத்தல

- கருத்திட்ட முன்மொழிவு இருப்பை தயாரித்தல் மற்றும் மேம்படுத்தல்

- கொள்கை அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பில் திணைக்களத்திற்கு சாட்டப்படும் விசேட செயன்முறைகளை அமுல்படுத்தல்

இதன் அடிப்படையில் 2010 – 2016 மகிந்த சிந்தனை அபிவிருத்தி சட்டகத்தின் நடுத்தர கால மீளாய்வாக 2014 – 2016 நடுத்தர கால பொது முதலீட்டு உபாயமான “Unstoppable Sri Lanka” 2020 தயாரிக்கப்பட்டது.

2. **திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள்**

திணைக்களத்தின் தொழிற்பாடுகளை மிகவும் சிறப்பாக கொண்டு நடாத்துவதற்காக திணைக்களமானது 9 துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளதோடு அத்துறைகள் மேலும் 31 உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அது பொருளாதார அபிவிருத்தியின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு துறையும் அதன் கீழ் காணப்படும் வரிசை அமைச்சுக்கள் தொடர்பான கொள்கை உருவாக்கம், திட்டங்களை தயாரித்தல், மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை தயாரித்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக உள்ளது.

**துறைகள்**

i. விவசாயம் நீர்ப்பாசணம் மற்றும் காணி

ii. பொது வசதிகள்

iii. வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து, தகவல் தொடர்பு, தபால் மற்றும் தொலைத் தொடர்பு
iv. கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் பெருந்தோட்டம்
v. கலை, மதங்கள், தேசிய நல்லிணக்கம், விளையாட்டு, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி
vi. கல்வி மற்றும் சுகாதாரம்
vii. சுற்றாடல், தொழிநுட்பம், ஆராய்ச்சி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை
viii. பேரண்ட பொருளாதாரம், சமூக பாதுகாப்பு, தொழில் மற்றும் சிறைச்சாலைகள்
ix. பொது முகாமைத்துவம்

இதற்கு மேலதிகமாக தகவல்களை பரிமாற்றம் செய்தல், நிர்வாகம், கணக்காய்வு என்பவற்றிற்காக மேலும் மூன்று வெவ்வேறான பிரிவுகள் காணப்படுகின்றன.

i. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்
ii. நிர்வாகப் பிரிவு
iii. நிதிப் பிரிவு

## 3. துறைவாரியான செயலாற்றுகை

### 3.1. விவசாயம், நீர்ப்பாசணம் மற்றும் காணி

**விவசாயம்**

விவசாயமானது நாட்டு மக்களின் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோரின் பிரதான வாழ்வாதாரமாக காணப்படுவதோடு அது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் காணப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் விவசாயத்துறையானது மொத்த தேசிய உற்பத்தியில் 10.3 சதவீத பங்களிப்பைச் செய்துள்ளதோடு அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சிறியதொரு வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. பிரதானமாக உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த 6 வருட காலப்பகுதியில் விவசாயத்துறையானது சராசரியாக 4 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளதோடு, 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013ஆம் ஆண்டில் அது 4.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

2013ஆம் ஆண்டில் அரசாங்கமானது ரூபா 66,028 மில்லியன்களை விவசாயத்துறை மீது செலவு செய்துள்ளது. இதில் ரூபா 52,296 மில்லியன்கள் உர மானியமாகும். ரூபா 60,028 மில்லியன்கள் உர மானியம் உட்பட விவசாய சேவை விரிவாக்கலில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு மேம்படுத்தப்பட்ட மற்றும் தரமான சேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு விவசாயத்துறை வளர்ச்சி பெற்றுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 2013 ஆம் ஆண்டு “தேசத்திற்கு மகுடம்” தேசிய கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான துண்டுப்பிரசுர பிரசுரிப்புக்கு அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகள் மற்றும் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2012 ஆம் ஆண்டு ஆண்டறிக்கைக்கு இரண்டு விசேட பெட்டி கட்டுரைகள் தயாரிக்கப்பட்டன. அவையாவன:
  1. விவசாயம் - உணவுப் பாதுகாப்பை நோக்கி
  2. விவசாயத்துறை உற்பத்தித் திறன்

**மதிப்பீடு செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்**

2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் பின்வருமாறு:

| இல. | கருத்திட்டம் | மொத்த கிரயம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| 1. | வரண்ட வலய வாழ்வாதார அனுசரனை மற்றும் பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்ட கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டம். | 2,500 |
| 2. | இலங்கையில் பருவங்களின் அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவம் மற்றும் பெறுமதி சேர்ப்பது தொடர்பான கருத்திட்டம் | 91.04 |
| 3. | நாட்டின் விவசாயத்துறைக்கு அவசியமாக சிறந்த ஆற்றல்களைக் கொண்டு தொழில் வல்லுனர்களை உருவாக்கும் நோக்கில் இலங்கை விவசாயக் கல்லூரிகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டம் | 350 |
| 4. | மலர் உற்பத்தி தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு | 300 |
| 5. | ஆசியாவில் விவசாயம் மற்றும் உணவுக்கான தாவர மரபியல் வளங்கள் தொடர்பாக சர்வதேச ஒப்பந்தம் தொடர்பான புரிந்துகொள்ளலை அதிகரித்தலும் அதனை அமுல்படுத்தலும் | 435 ஐ.அ.டொ |
| 6. | போசாக்கு தொடர்பான தகவல் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான சர்வதேச உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் தொழிநுட்ப உதவி | 450,000 ஐ.அ.டொ |
| 7. | கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தி | 750,000 ஐ.அ.டொ |
| 8. | நோய்கள் அற்ற மற்றும் தரமான விதைகள் உற்பத்தியை உறுதி செய்வதனூடாக இலங்கையில் விவசாய உற்பத்தித் திறனை அதிகரிப்பது மற்றும் கிருமிநாசினிகளின் பாவனையைக் குறைப்பதை நோக்காக் கொண்டு விதை**களின்** தரத்தை பரிசோதிப்பதற்கான ஆய்வுகூடத்தை உருவாக்குதல் | 200 |
| 9. | இலங்கையில் சோளபபயிர் பயிரிடலை ஊக்குவிக்குமுகமாக சோளபபயிர் வகைகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தொழிநுட்பங்களை அபிவிருத்தி செய்தல் | 5.5 |
| 10. | அறியப்படாத காரணங்களினால் உருவாகும் சிறுநீரக நோய் தொடர்பில் மக்களின் உணவுப் பழக்கம் மற்றும் நோய்க்கு உட்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு **பொருத்தமான** வழியைக் கண்டறிவதற்குமான தேசிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | 755 |
| 11. | அரசாங்க ஆதரவுடன் தனியார் விவசாய இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் நிலையமொன்றை உருவாக்குவதற்கான கருத்திட்டம் | 15.1 |
| 12. | பப்பாசிப்பழம், எலுமிச்சை, அ**ன்**னாசிப்பழம் போன்றவற்றில் தற்போது காணப்படும் மற்றும் புதிய இன வகை நோய்கள் அற்ற நாற்று மூலங்களை உருவாக்குதல் | 19 |
| 13. | விதை உருளைக் கிழங்கிற்கான உள்நாட்டு கேள்வியை சமாளிக்கக்கூடிய வகையில் உள்நாட்டு விதை உருளைக் கிழங்கு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் பல்வேறுபட்ட உருளைக் கிழங்கு வகைகளை உற்பத்தி செய்யும் வகையில் சீதா **எலி**ய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 70 |
| 14. | சந்தை நிலைகள் மற்றும் பெறுமதி சங்கிலி என்பவற்றின் அடிப்படையில் தற்போது காணப்படும் விவசாய விரிவாக்கல் | 37.4 |

| | | |
|---|---|---|
| | சேவைகளின் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் விவசாய விரிவாக்கல் முறைமைகளை உருவாக்குதல் | |

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பூரணப்படுத்தப்பட்ட பிரதான இலக்குகள்**

- 14 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- விவசாய அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 23 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு திட்டமிடல் அமைச்சின் சார்பாக அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- முன்னேற்ற மீளாய்வு மற்றும் கொள்கை மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றியமை.

**கால்நடைகள்**

கால்நடைத் துறையானது பிரதானமாக பாற்பண்ணை, கோழி, பன்றி மற்றும் ஆடு ஆகிய உப துறைகளை பிரதானமாகக் கொண்டதாகும். 2013 ஆம் ஆண்டில் இத்துறை மீதான பொது முதலீடுகளாவது ரூபா 2,428 மில்லியன்களாகும். இதில் ரூபா 1,919 மில்லியன்கள் பிரதானமாக கால்நடை மேம்பாடு, கால்நடைகள் நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல், விரிவாக்கல் சேவைகளை விரிவுபடுத்தல் மற்றும் கால்நடை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான மூலதன செலவுகளாகும். கால்நடைத் துறையின் நடவடிக்கைகள் கால்நடைகள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களான **கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், மற்றும் தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபை என்பவற்றின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

**மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் பாற்பண்ணை மிருகங்களை இறக்குமதி செய்வதற்கான கருத்திட்ட வழிப்படுத்தல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியமை
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட "Unstoppable Sri Lanka" பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 இற்கு "பாற்பண்ணைக் கைத்தொழிலில் தன்னிறைவு – 2020" எனும் தலைப்பிலான பகுதி தயாரிக்கப்பட்டது
- தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 7 கருத்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன
- கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 09 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது

**நீர்ப்பாசனம் மற்றும் காணி**

2013 ஆம் ஆண்டில் விவசாயத்துறை மீதான மொத்த செலவீனம் ரூபா 34.8 பில்லியன்களாகும். இதில் ரூபா 31.2 பில்லியன்கள் மூலதனச் செலிவீனமாகும். புதிய நீர்வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மொரகஹகந்த, களுகங்க நீர்த்தேக்க அபிவிருத்தி திட்டம், தெதுரு ஓயா நிகழ்ச்சித்திட்டம், உமா ஓயா நீர்மின்சார திசை திருப்பல் கருத்திட்டம் போன்ற பாரிய திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்கு நீர் வழங்கும் நோக்குடன் பல புதிய நீர்ப்பாசனத்

திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஜின்/நில்வலா திசைதிருப்பல் திட்டம், முறைமை பீ (மாதுரு ஓயா) வலது கரை அபிவிருத்தித் திட்டம், மல்வத்து ஓயா திசைதிருப்பல் திட்டம், முறைமை எல் (வெலி ஓயா) அபிவிருத்தி திட்டம் மற்றும் வடமத்திய கால்வாய் திருத்தப் பணிகள் என்வற்றின் மீது அதிக முன்னுரிமை அளிக்கப்படும்.

காணித்துறை மீதான மொத்த செலி**வீ**னம் ரூபா 4,806 மில்லியன்களாகும். இதில் ரூபா 2,186 மில்லியன்கள் மூலதனச் செலவ**வீ**னங்களாகும். 2013 இல் காணி உறுதி (பிம் சவிய) நிகழ்ச்சித்திட்டம் ரூபா 668 மில்லியன்) அரச தேவைகளுக்கான காணி சுவீகரிப்பு (ரூபா 1,252 மில்லியன்) கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (ரூபா 40 மில்லியன்) மற்றும் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மீது (ரூபா 226 மில்லியன்) ஒரு குறிப்பிடும்படியான அளவிலான செல**வீ**னங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**விசேட கற்கைகள்:**

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு நீர்ப்பாசனம் தொடர்பான 2 அலகு மற்றும் "சீதோஷ்**ண** நிலை மாற்றங்களுக்கு இயைபாகுதல்" என்ற தலைப்பிலான விஷேட பெட்டி கட்டுரையும் தயாரிக்கப்பட்டது.

**விசேட நிகழ்ச்சிகள்:**

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட "Unstoppable Sri Lanka" 2020 பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 இன் 05 ஆம் அத்தியாயமான நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ உப அலகிற்கு "நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அபிவிருத்தி - இயற்கையினால் வழிப்படுத்தப்பட்ட அபிவிருத்தி" என்ற தலைப்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- நீர்ப்பாசனத்துடன் தொடர்புபட்ட 23 கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் காணித் துறையுடன் தொடர்புபட்ட 04 கருத்திட்ட முன்மொழிவுகளும் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 17 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதா**னீ**ப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 08 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவத**ரனி**ரிப்பு வழங்கப்பட்டது.

- வானிலை விளைவுகளை கையாள்வதை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 8 ஆற்றங்கரை அபிவிருத்தி திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்ட முன்மொழிவை தயாரிப்பதில் தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம், அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டம், இரணைமடு

நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம் என்பவற்றின் கருத்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியதோடு மேலும் பல முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் கொள்கை மீளாய்வுக் கூட்டங்களிலும் பங்குபற்றின.

## 3.2. பொது வசதிகள்

**நீர் வழங்கள்**

2020 ஆம் ஆண்டில் நாட்டில் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் இலக்காகும். இவ்விலக்கின் கீழ் நாட்டில் காணப்படும் 60 சதவீதமான வீடுகளுக்கு குழாய் நீர் விநியோகத்தை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் முதலீடுகள் மேற்கொள்ளப்படும். இதன் அடிப்படையில் நகரங்கள், கைத்தொழில் மயமாக்கல் மற்றும் நீருடன் தொடர்புபட்ட நோய்கள் அதிகமாகக் காணப்படும் பிரதேங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குழாய் நீர் வசதிகள் பெற்றுக் கொடுப்பதும் அரசாங்கத்தின் உபாயமாகும். கிராமங்களுக்கு குழாய் நீர் விநியோகமானது சமூக அடிப்படை நிறுவனங்களினால் முகாமை செய்யப்படும். சமூக நீர் வழங்கல் திட்டங்களினால் பாதுகாப்பான குழாய் நீர் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் ஒரு உபாயமாகும். அரசாங்கமானது மேலே கூறப்பட்ட சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு அவசியமான தொழிநுட்ப அனுசரணையை பெற்றுக் கொடுப்பதோடு அந்நிவனங்களை ஒழுங்குபடுத்துகின்றது.

**அடையப்பட்ட இலக்குகள்**

- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 26 இற்கும் மேற்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நேரடி மற்றும் அனுசரணை அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- 2012 ஆம் ஆண்டின் நிதித் திட்டமிடல் அமைச்சின் ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அவசியமான தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- "Unstoppable Sri Lanka" 2020 பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கு நம்பகரமான நீர்ச் சேவைகள் எனும் தலைப்பில் அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- கீழ்வரும் கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளது
    - நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
    - நீர்வழங்கல் மற்றும் சுகாதார துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்கள்
    - நீர்வழங்கள் மற்றும் சுகாதாரத் துறையின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்

**மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை**

**கொள்கை**

பாதுகாப்பான, நிலைபேறான, நம்பகமான மற்றும் தூய்மையான பொருளாதார ரீதியாக குறைந்த கிரயத்திலான மின்சாரத்தின் கிடைப்பனவை உறுதி செய்தல் மற்றம் சமூகத்தில் சமமான அபிவிருத்திக்கு அவசியமான மின்சார சேவைகளை பெற்றுக் கொடுப்பதுமாகும்.

நாடானது அண்மைக்காலங்களில் உறுதியான பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளதோடு அது மின்சாரத்திற்கான கேள்வியை துரிதமாக அதிகரித்துள்ளது. இலங்கையில் மின்சாரம் மற்றும் பெற்றோலியத்தை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள்களே பிரதான வர்த்தக ரீதியான சக்தி வளங்களாகும். ஆகவே மின்சாரம் மற்றும் பெற்றோலிய பொருட்களின் விலை மாற்றமானது நாட்டின் பொருளாதாரத்தில் நேரடி தாக்கம் செலுத்துகின்றது.

***மின்சாரம்:***

அண்மைக் காலங்களில் நாட்டின் பொருளாதாரம் ஒரு உறுதியான பொருளாதார வளர்ச்சியைக் காட்டியுள்ளதுடன் இது மின்சாரத்திற்கான கேள்வியை வருடாந்தம் 8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இக்கேள்வியை பூர்த்தி செய்வதாயின் 2016 ஆம் ஆண்டில் இலங்கையானது 3,950 மெகா வோட்களை பொருத்தப்பட்ட அலகுகளாகக் கொண்டிருத்தல் வேண்டும். 2013 ஆம் ஆண்டில் அரசாங்கமானது மின்சாரத் துறையில் ரூபா 26.01 பில்லியன்களை முதலீடு செய்துள்ளது. இதனூடாக 2013 ஆம் ஆண்டில் தேசிய மின்மயமாக்கலானது 95 சதவீதத்தையும் மிஞ்சியுள்ளது. 2013 ஆம் ஆண்டில் மொத்தம் பொருத்தப்பட்ட அலகுகள் மற்றும் மின்சார பிறிப்பாக்கமானது முறையே 3,655 மெகா வோட்கள் மற்றும் 11,960 ஜிகா வோட் மணித்தியாலங்களாகும்.

***பெற்றோலியத் துறை***

| கீழ் நோக்கிய பெற்றோலியத் துறை | மேல் நோக்கிய பெற்றோலியத் துறை |
|---|---|
| ***தற்போதைய நிலைமை:***<br>• தற்போது இலங்கையின் மசகு எண்ணெய்க்கான ஒரு நாளைய கேள்வியானது 100 **கிலொ பரல்கள்**இது கடந்த 15 வருட காலப்பகுதியில் 5 சதவீதத்தினால் அதிகரித்து வந்துள்ளது. பொருளாதாரம் மேலும் விரிவடையும் போது எண்ணெய்க்கான கேள்வியானது மேலும் வளர்ச்சியடையும்.<br>• இலங்கையானது 100 சதவீதமான பெற்றோலிய தேவைகளையும் இறக்குமதி செய்து பெற்றுக் கொள்கின்றது. இது 40 சதவீதம் மசகு எண்ணெயாக இறக்குமதி செய்யப்பட்டு நாட்டில் காணப்படும் ஒரே ஒரு மசகு எண்ணெய் | ***தற்போதைய நிலைமை:***<br>• 2008 ஆம் ஆண்டில் இலங்கையின் மன்னார் கரையில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பிடும்படியான முன்னேற்றங்கள் இதுவரையில் அடையப்பட்டுள்ளன.<br>• மன்னார் கரையில் நில ஆய்வுத் தகவல்களைப் பெறும் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.<br>• கரின் லங்கா நிறுவனத்தினால் எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற் கிணற்றிலேயே உயர் தரத்திலான இயற்கை வாயு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| சுத்திகரிப்பு ஆலையான சபுகஸ்கந்த நிலையத்தில் சுத்திகரிக்கப்படுகின்றது. மிகுதியானது சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களாக இறக்குமதி செய்யப்படுகின்றது. (2012 மற்றும் 2013 ஆம் ஆணடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட – சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் முறையே 1,637,000 மற்றும் 2,748,000 மெற்றிக் தொன்களாகும்) | |

**2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்**

| | **மதிப்பீடு** | **மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் (ரூபா மில்லியன்)** |
|---|---|---|
| 1. | தென் பிராந்தியத்தில் 1,200 மெகா வோட் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் ஒன்றை தயாரிப்பதற்கான சாத்திய வள அறிக்கைக்கான கொள்கை பத்திரம் | 1,800 மில்லியன் |
| 2. | தேசிய மின் கட்டமைப்புக்கு மீள் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களை உள்வாங்குதல் | 3,700 மில்லியன் |
| 3. | மேல் கொத்மலை நீர் மின் உற்பத்தி கருத்திட்டத்தின் கீழ் பூண்டுலோயா மற்றும் பூண்டுலு நீர்வீழ்ச்சி கீழ்ப்பகுதி திசை திருப்பல் திட்டத்திற்கான கருத்திட்ட முன்மொழிவு | 630 |
| 4. | வெயாங்கொடை கிரிந்திவல – பாதுக்க 200 கி.வோட் மின்மாற்றல் அபிவிருத்தி கருத்திட்டம் | 684.2 |
| 5. | வெயாங்கொடை – துல்ஹிரிய 132 கி.வோட் மின்மாற்றல் கம்பி நிர்மாணம் | 1,395.4 |
| 6. | 220/33 கி.வோட் கெரவலபிட்டிய மின் உப நிலைய நிர்மாணம் | 1,641.7 |
| 7. | 132/33 கி.வோட் பத்தரமுல்லை மின் உப நிலைய நிர்மாணம் | 1,707.7 |
| 8. | 132/33 கி.வோட் பத்தரமுல்லை மின் உப நிலைய நிர்மாணம் | 1,707.7 |
| 9. | கொத்மலை – புதிய பொல்பிட்டிய 220 கி.வோட் மின்மாற்றல் கம்பி நிர்மாணம் | 1,782.7 |
| 10. | கொலன்னாவ – பன்னிபிட்டிய 132 கி.வோட் மின்மாற்றல் வயலைமைப்பின் கொள்ளளவை அதிகரித்தல் | 499.9 |
| 11. | பொல்பிட்டிய – புதிய ஹபரன 132 கி.வோட் மின்மாற்றல் வலையமைப்பு நிர்மாணீத்தல் | 6,355.7 |
| 12. | பன்னிபிட்டிய - இரத்மலானை 132 கி.வோட் மின்மாற்றல் வலையமைப்பு கொள்ளளவை மேம்படுத்தல் | 394.1 |
| 13. | தெஹிவலை – கல்கிஸ்ஸை பிரதேசத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள நிலக்கீழான மின்சார விநியோகத் திட்டம் | 1,256.4 |
| 14. | பத்தரமுல்ல பிரதேசத்திற்கான 11 கி.வோட் நிலக்கீழ் மின்சார விநியோகத்திட்டம் | 1,000 |

இதற்கு மேலதிகமாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மின்சாரம் மற்றும் சக்திவளத்துறையினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- மின் சக்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 30 இற்கும் மேற்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நேரடி மற்றும் துணை அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- “மரபு ரீதியற்ற மீள் பயன்படுத்தக்கூடிய சக்தி வள அபிவிருத்தியாளர்களுக்கு வழங்கக்கூடிய மின் கட்டணம்” தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டது.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட Unstoppable Sri Lanka 2020 பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கு மின்சாரம் மற்றும் சக்தி வளம் மற்றும் “பாரிய சமுத்திரம் - தொடப்படாத சமுத்திர வளங்கள்” என்ற தலைப்பில் கரை கடந்த எண்ணெய் அகழ்வு தொடர்பில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- மின்சாரம் மற்றும் பெற்றோலியத்துறை தொடர்பான முன்மொழிவுப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன

## 3.3. வீதிகள், துறைமுகங்கள், போக்குவரத்து, விமான சேவைகள், தகவல் தொழிநுட்பம், வெகுசனத் தொடர்பு, தபால் சேவை மற்றும் தொலைத்தொடர்பு

**வீதித்துறை**

2008/ 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் வீதி உட்கட்டமைப்பு குறிகாட்டியானது 63 ஆவது இடத்தில் காணப்பட்டது. அது 2012/ 2013 இல் 48 இடம் வரையில் தரம் உயர்ந்துள்ளது. விரிவடைந்து வரும் பொருளாதார நடவடிக்கைகளுடன் வீதி வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதோடு நாட்டின் 95 சதவீதமான போக்குவரத்துகளானது வீதி வலயமைப்பினூடாகவே கையாளப்பட்டுள்ளது.

வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சி மற்றும் சமத்துவமான பிராந்திய அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்துள்ளது. முழு வீதி வலயமைப்பினையும் அனைத்து காலநிலைக்கும் ஒத்தவாறு அபிவிருத்தி செய்வதே இலக்காகும். செயற்றிரனான பொருட்கள் மற்றும் மனிதர்களின் நகர்வினை உறுதி செய்யக் கூடிய வகையில் பிராந்தியங்களுக்கிடையிலான அதிவேகப் பாதைகள் மற்றும் 100 சதவீத கிராமிய தொடர்பினை உருவாக்குவதுமே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும்.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- உரிய உபாயங்களைத் தயாரிப்பதில் உரிய அமைச்சுக்களுக்கு தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- “கிராமிய மையம் வீதித் தொடர்பு நிகழ்ச்சித் திட்டம்” தொடர்பான திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டது.
- “1000 கிராமிய பாலங்கள்” புனரமைத்தல் மையக் கருத்து அபிவிருத்தி செய்யப்பட்டு கருத்திட்டமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டது.
- Unstoppable Sri Lanka 2020 பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கு வீதி வலயமைப்பு அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- வுரிசை அமைச்சுக்களினால் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட முன்மொழிவுகளையும் உள்ளடக்கியவாறு கருத்திட்ட இருப்பானது புதுப்பிக்கப்பட்டது.

- கிராமிய பாதைகள் மற்றும் தேசிய பெருந்தெருக்களுக்குமான மையக் கருத்து பத்திரம் தயாரிக்கப்பட்டது.

- வீதி அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 52 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நேரடி மற்றும் துணை அவதானிப்பு வழங்கப்பட்டது.

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 18 புதிய கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டது.

**துறைமுகங்கள்**

பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் பிரதான ஒரு துறையாக துறைமுகத்துறை அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது நடைமுறையில் கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகங்களும் மற்றும் காலி, ஒலுவில், திருகோணமலை, காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை ஆகிய பிராந்திய துறைமுகங்களும் செயற்படுகின்றன. இலங்கைத் துறைமுகங்கள் வருடாந்தம் 5.6 மில்லியன் இருபது அடிக் கொல்களன்களை கையாள்வதோடு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்தில் குறிப்பிடும்படியான தாக்கத்தையும் செலுத்துகின்றது. தற்போது இடம்பெற்றக் கொண்டிருக்கும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் 11 ஆம் கட்ட அபிவிருத்தி மற்றும் கொழும்பு துறைமுக விரிவாக்கல் கருத்திட்டம் என்பன நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெருமளவில் பங்களிப்புச் செய்யும்.

**போக்குவரத்து**

இலங்கை போக்குவரத்து துறையின் இலக்கானது மேம்படுத்தப்பட்ட மற்றும் செயற்றிறனான போக்குவரத்து முறைமையினூடாக பாதுகாப்பு, நம்பகரமான மற்றும் சொகுசான சேவையை உறுதி செய்வதாகும். தொடர்ந்து அதிகரித்து வரும் தரைமார்க்க போக்குவரத்து சேவைகளுக்கான கேள்வியானது பயணிகள் மற்றும் பொருட்கள் சேவைகளில் கொள்வனவு இடையூறுகளை உருவாக்கியுள்ளது. இதனை நிவர்த்தி செய்யுமுகமாக போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், போக்குவரத்து சேவைகளுக்கு மேம்படுத்தப்பட்ட அடைவு மற்றும் நவீன வசதிகளுடன்கூடிய பல் ஊடக போக்குவரத்து அபிவிருத்தி என்பவற்றில் நிலைபேறான முதலீடுகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட போக்குவரத்து ஊடகப் பாவணையாளர்களை சிறப்பான தரமான பொதுப் போக்குவரத்து ஊடகங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் மூலம் கவருவதே போக்குவரத்து துறையின் தூர நோக்காகும்.

**விமானத்துறை**

இலங்கையின் விமான சேவைக்கான நீண்ட கால கேள்வியின் வளர்ச்சிப் போக்கானது எப்போதும் சாதகமானதாகவே காணப்படுவதோடு அது மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் நேரடித் தொடர்பையும் கொண்டுள்ளது. பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் 13 உள்ளூர் விமான நிலையங்களையும் மேலும் அபிவிருத்தி செய்து இலங்கையை பிராந்தியத்தில் விமான சேவைத்தள மைய நிலையமாக மாற்றும் தூர நோக்கை அடைந்துகொள்வதில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. விமான சேவைத்துறையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியானது விமானங்களைப் பராமரித்தல், பழுதுபார்த்தல், செப்பணிடல், குதமிடல்,

மற்றும் உணவுப் பரிமாறல் சேவைகளில் ஏற்படும் அதிக கேள்வியானது நாட்டில் சிறப்பான விமான சேவைத்துறையின் உயர்ச்சிக்கு சிறந்த சந்தர்ப்பமாக காணப்படும்.

**செயலாற்றுகை**

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபாரிசுகளானது வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் வரவு செலவுத்திட்ட திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- போக்குவரத்து, துறைமுகம் மற்றும் விமானத்துறைக்கான கருத்திட்ட இருப்பானது தயாரிக்கப்பட்டது.

- உரிய துறைகளுக்கு அவசியமான கொள்கைகள், மற்றும் உபாயங்களை உருவாக்குவதில் தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

- “Unstoppable Sri Lanka” 2020 பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கு போக்குவரத்து, துறைமுகம் மற்றும் விமானத்துறை அத்தியாயங்கள் தயாரிக்கப்பட்டன.

- 2014 – 2016 காலப்பகுதிக்கான முன்னுரிமை அடிப்படையில் இத்துறை அபிவிருத்திக்கான வெளியீட்டு குறிக்காட்டிகள் தயாரிக்கப்பட்டன.

- 2014 – 2016 ஆம் ஆண்டிற்கான பொது முதலீட்டு அட்டவணை தயாரிக்கப்பட்டது.

- இத்துறையில் நடைமுறையில் காணப்படும் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

- பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் கப்பல் சிவில் விமான சேவைகள், போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 18இற்கு நேரடி மற்றும் துணை அவதானிப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- 2012 ஆம் ஆண்டின் நிதித் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கைக்கு துறைமுகங்கள் மற்றும் விமானத்துறை தொடர்பான அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

- தேசத்திற்கு மகுடம் 2013 கண்காட்சிக்கான கைநூலுக்கான தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைக்கு போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைத் துறைக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது.

**தகவல் மற்றும் தொலைத் தொடர்புத்துறை**

தகவல் தொழிநுட்பம், தபால் மற்றும் தொலைத் தொடர்பு ஆகிய பிரிவுகளை தகவல் தொலைத் தொடர்பு துறையானது உள்ளடக்கியுள்ளது. தகவல் தொழிநுட்பமானது வருமானம் உழைக்கும் கைத்தொழில்களான தகவல் தொழிநுட்ப சேவை வழங்கல்கள், தகவல் மற்றும்

தொலைத்தொடர்பு தொழிநுட்பம், வியாபாரச் செயற்பாடுகள், வெளியார் சேவைகள் அறிவுசார் (தொழில்வல்லமை) செயற்பாடுகளை வெளியார் சேவைகளைப் பெறல் (KPO) போன்ற துறைகளையும் உள்ளடக்கியதாகும்.

அரசாங்கமானது தகவல் தொழிநுட்பம் மற்றும் தொழிநுட்பத்துறையை அறிவுடன் தொடர்புபட்ட துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, தகவல் தொடர்பு தொழிநுட்பத்தை மேம்படுத்துவதில் அரசாங்கமானது உயர் முன்னுரிமை அளித்துள்ளதோடு தகவல் மற்றும் தகவல் தொடர்புக்கான நுழைவு, மற்றும் இலத்திரனியல் அரச செயற்பாட்டை அதிகரித்தல் என்பவற்றிற்கு உறுதியளிப்பதோடு இலங்கையில் தனியார்த்துறையானது தகவல் தொழிநுட்ப சேவைகளை வழங்குதல் மற்றும் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதிலும் முக்கிய பங்காற்றுகிறது.

**செயலாற்றுகை**

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 13 கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- தகவல் மற்றும் தொலைத்தொடர்பு துறைக்கான கருத்திட்ட இருப்பு தயாரிக்கப்பட்டது.
- உரிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை தயாரிப்பதில் உரிய அமைச்சுக்கு தேவையான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 தயாரிக்கப்பட்டது.
- தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சு, தபால் சேவைகள் அமைச்சு, தகவல் தொடர்பு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 18 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நேரடி மற்றும் துணை அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- தேசத்திற்கு மகுடம் 2013 கண்காட்சிக்கான கைநூலுக்கு அவசியமான தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு தகவல் மற்றும் தொலைத் தொடர்புதுறை செயலாற்றுகை அறிக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கு தேவையான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 3.4. கைத்தொழில் வர்த்தகம் மற்றும் பெருந்தோட்டத் துறை

**கைத்தொழில்துறை**

உயர் பெறுமதி சேர்ப்பு, பல்வகைப்படுத்தல், உயர் தொழிநுட்பம் கொண்ட கைத்தொழில் துறையானது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் தவிர்க்க முடியாத அங்கமாகும். அரசாங்கத்தின் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கையானது ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உயர் பெறுமதி சேர்க்கை, உயர்ந்தபட்ச தொழிநுட்ப செறிவு மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட கைத்தொழில்களை உருவாக்குவதில் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. இதற்கமைய அதனது கொள்கை இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் வழிநடாத்துவதில் தேசிய திட்டமிடல் திணைக்களமானது பல்வேறு வகைகளிலும் கடந்த வருடத்தில் பங்களிப்புச் செய்துள்ளது.

**செயலாற்றுகை**

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 8 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவை அமுல்படுத்தப்படுவதற்கான நிதியினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நிதியீட்டம் செய்யப்பட வேண்டிய மூலத்தின் அடிப்படையில் வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- கைத்தொழில் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 5 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் சிறுதொழில் முயற்சிகள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 4 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- அரசாங்கத்தின் அபிவிருத்தி கொள்கை சட்டகத்தின் அடிப்படையில் கைத்தொழில் உபாயத்தை தயாரிப்பதற்கான கலந்துறையாடல்கள் உரிய நிறுவனங்களுடன் தொடரப்பட்டன.

- இலங்கைக்கான ஏற்றுமதி அபிவிருத்தி உபாயத்தை தயாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 இன் அத்தியாயம் 11.1 இற்கு “சிறந்த கைத்தொழில் துறைக்கான முயற்சி” எனும் தலைப்பில் அத்தியாயத்தை தயாரிப்பதற்கு உரிய உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- தேசத்திற்கு மகுடம் 2013 கண்காட்சிக்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- உரிய அமைச்சினால் மற்றும் நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் வழிப்படுத்தல் மீளாய்வுக் கூட்டங்களில் பங்குபற்றி இத்துறையின் மேம்பாட்டிற்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**பெருந்தோட்டத்துறை**

பெருந்தோட்டத் துறையானது பிரதானமாக தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றை பிரதானமாக உள்ளடக்கியதோடு விவசாயத்துறை ஏற்றுமதியில் முக்கிய பங்காற்றுகின்றது. பெருந்தோட்டத் துறையானது மொத்த தேசிய உற்பத்தியில் 2.5 சதவீத பங்களிப்புச் செய்வதோடு அது ஏறக்குறைய 1.5 மில்லியன் பேருக்கு நேரடி மற்றும் மறைமுகமாக தொழில் வாய்ப்பை வழங்கியுள்ளது. 2013 இல் பெருந்தோட்டத் துறையின் மொத்த ஏற்றுமதி வருமானமானது ரூபா 295 பில்லியன்களாகும். பெருந்தோட்ட ஏற்றுமதியில் தேயிலையின் பங்களிப்பானது 46 சதவீதமாகும்.

இலங்கையானது உலகிற்கு பெருந்தோட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளில் ஒன்றாகும். இலங்கையின் தேயிலையானது உலக பிரசித்தி பெற்றதாகும். அரசாங்கமானது பெருந்தோட்ட உற்பத்திகளின் தரம், தொகை மற்றும் சந்தை வசதிகளை மேம்படுத்துவதனூடாக உலக சந்தையில் போட்டித் தன்மையை எதிர்கொள்வதற்கு தயாராகவுள்ளது. பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர் மேம்படுத்தல் அமைச்சு, மற்றும் சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பன பெருந்தோட்டத்துறை அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட பிரதான அரசாங்க அமைச்சுக்களாகும்.

**செயலாற்றுகை**

2013ஆம் ஆண்டில், ஆறு கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதற்காக சிபாரிசு செய்யப்பட்டன. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர் மேம்படுத்தல் அமைச்சு மற்றும் சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது. மேலும், வழிப்படுத்தல் குழுக் கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள், வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் மற்றும் கொள்கை மீளாய்வு கூட்டங்கள் என்பவற்றில் பங்குபற்றின.

"Unstoppable Sri Lanka 2020" பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 இற்கான உலகாளவிய போட்டித் தன்மையை நோக்கிய பெருந்தோட்டத் துறை கைத்தொழில் என்ற தலைப்பிலான 11.3 அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

## 3.5. கலாசாரம், சமயங்கள், தேசிய நல்லிணக்கம், விளையாட்டு மற்றும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

**கலாசாரம், மரபுரிமைகள், தேசிய மொழிகள், மத விவகாரம் மற்றும் விளையாட்டு**

இப்பிரிவானது பல்தரப்பட்ட விடயப் பரப்புகளான விளையாட்டு, கலாசாரம், மற்றும் கலை, தேசிய மரபுகள், பௌத்த சமயம் மற்றும் மத விவகாரங்கள், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு என்பவற்றை உள்ளடக்கியதாகும். இப்பிரிவானது மேற்கூறப்பட்ட விடயப் பரப்புக்களுடன் தொடர்புபட்ட ஐந்து அமைச்சுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட திணைக்களங்களுடன் தொடர்புபட்ட விடயங்களைக் கையாள்கின்றது.

**செயலாற்றுகை**

- 21 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு இப்பிரிவினால் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- 17 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவை அமுல்படுத்தப்படுவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கான “பகிரப்பட்ட பெறுமதிகள் மற்றும் முழுமையான அபிவிருத்தி” மற்றும் “ஒரு நலமான தேசம்” என்ற தலைப்புக்களிலான அத்தியாயங்கள் தயாரிக்கப்பட்டன.
- 2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்யப்பட்டது.

**வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி**

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு, கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, மீள் குடியமர்த்தல் அமைச்சு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் வீடமைப்புத் துறை மீது அரசாங்கமானது ரூபா 8 பில்லியன்களை செலவு செய்துள்ளது. இதில் கொழும்பு நகரில் காணப்படும் சேரிக் குடியிருப்புக்களை மீள் குடியமர்த்துவதற்கான 50,000 வீடமைப்புத்திட்டம் மிகவும் முக்கியமானதாகும். இத்திட்டத்தின் முதற்கட்ட அமுலாக்கலுக்கு 2011 – 2013 காலப்பகுதிக்கு ரூபா 32 பில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 235 மில்லியன் செலவில் 464 பெருந்தோட்ட வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி தொடர்பில் ஒரு சிறப்பான திட்டமிடல் அனுகுமுறையினை பின்பற்றி நகர அபிவிருத்தியினை மேற்கொள்ளும் நோக்குடன் உபாய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி தொடர்பில் ரூபா 6.5 பில்லியன்கள் செலவு செய்யப்பட்டுள்ளன. இதன் கீழ் வெள்ளத் தடுப்பு, பச்சை பிரதேசம் மற்றும் நடை பாதைகள் அமைத்தல், பழைய பிரசித்தமான கட்டிடங்களை புணரமைத்தல், மற்றும் பொது நகர வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பனவே பிரதான நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னுரிமை நடவடிக்கைகளாகும். சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில், பொதுச் சந்தைகளை நிர்மானித்தல், பஸ் தரிப்பிடம் மற்றும் தொடர்புபட்ட வியாபார நிலையங்களை அபிவிருத்தி செய்தல், உள்ளக வீதி அபிவிருத்தி மற்றும் பாதசாரிகளின் வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- 28 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டன.
- 41 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 இல் பிரசுரிப்பதற்கான கட்டுரை தயாரிக்கப்பட்டது.

- “தேசத்திற்கு மகுடம் 2014” க்கு தேவையான வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பாக எதிர்கால உபாயங்கள் உள்ளடங்கியவாறான ஒரு முன்மொழிவுப் பத்திரம் தயாரிக்கப்பட்டது.

## 3.6. கல்வி மற்றும் சுகாதாரம்

**சுகாதாரம்**

நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு பெறுமதியான பங்களிப்பைச் செய்யக்கூடிய ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தனி நபரை உருவாக்குவதே நாட்டின் சுகாதாரத்துறையின் தூர நோக்காகும். அரசாங்கமானது சுகாதாரத்துறைக்கு தொடர்ச்சியாக அதிக முதலீடுகளை மேற்கொண்டு அதி உயர் முன்னுரிமை அளித்துள்ளது. இதன் காரணமாக தொடர்ந்தும் நாட்டின் சுகாதாரக் குறிக்காட்டிகள் தொடர்ந்தும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர் சிறந்ததாகக் காணப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டில் தேசிய மற்றும் மாகாண மட்டத்திலான சுகாதார மற்றும் சுதேச வைத்தியத் துறை மீதான மொத்த முதலீடானது ரூபா 120 பில்லியன்களாகும். இது 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 52 சதவீத அதிகரிப்பாகும். இவ் அதிகரிக்கப்பட்ட முதலீடுகளானது 2007 ஆம் ஆண்டில் ரூபா 3,054 ஆகக் காணப்பட்ட தலைக்குரிய சுகாதாரச் செலவானது 2013 இல் ரூபா 5,686 ஆக அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் சுகாதாரத் துறை மீதான மூலதனச் செலவுகள் பிரதானமாக வைத்தியசாலைகள் அபிவிருத்தி, வைத்தியசாலை புனரமைப்பு மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காகவே மேற்கொள்ளப்பட்டன.

**விஷேட கற்கைகள்**

- தேசிய போசாக்கு பேரவையினால் தயாரிக்கப்பட்ட போசாக்குக்கான பல்துறை நடவடிக்கை திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு அதனை திருத்தி அமைப்பதற்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 19 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- சுகாதார அமைச்சு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 34 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 “ஆரோக்கியமான நாடு” என்ற தலைப்பில் ஒரு அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

- தற்போது காணப்படும் சுகாதாரத் துறையில் ஒரு சிறப்பான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் 2013 – 2017 ஐந்தாண்டு காலப்பகுதிக்கான தேசிய சுகாதாரத்துறை

அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான பல கலந்துரையாடல்கள் சுகாதார அமைச்சு மற்றும் அபிவிருத்தி பங்காளிகளுடனும் இடம்பெற்றன.

- சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டம் மற்றம் கருத்திட்ட வழிப்படுத்தல் கூட்டங்களில் கலந்து கொண்டது.

**கல்வி**

2013 ஆம் ஆண்டில் கல்வித் துறையானது மெச்சத்தக்க வகையிலான முன்னேற்றத்தைக் கண்டது. அரசாங்கத்தின் கல்வித் துறையின் தூர நோக்கானது இலங்கைப் பிரஜைகளின் எதிர்கால சந்ததியினர் உலகலாவிய ரீதியில் மாறி வரும் அறிவினால் வழிப்படுத்தப்படும் பொருளாதாரத்தின் சவால்களை சமாளிக்கக்கூடிய வகையில் திறன்களைக் கொண்டிருத்தலாகும். கல்வித்துறையில் பாரியதொரு மாற்றம் இடம்பெற்று வருகின்றது. அதாவது சிறுவர்கள் மத்தியில் பல்வேறுபட்ட திறன்களை வளர்க்கும் வகையில் தரமான மற்றும் சிறுவர் நட்பான கல்வி முறையானது உருவாக்கப்பட்டுள்ளது. கல்வியின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் கல்வியில் காணப்படும் பிராந்திய சமமின்மையை நோக்கி சகல வசதிகளுடன் கூடிய 1000 பாடசாலைகளைக் கொண்டு ஒரு வலையமைப்பு உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒரு பிரதேச செயலகப் பிரிவிற்கு மூன்று பாடசாலைகள் என்ற வீதம் 5000 ஆரம்ப பாடசாலைகள் இதில் அடங்கும். இதற்கு மேலதிகமாக முறைசார் கல்வி மற்றும் திறன் கல்விக்கு இடையில் ஒரு ஒருங்கிணைப்பை உருவாக்கும் நோக்கில் இளைஞர்களிடத்தில் ஆரம்பத்திலேயே திறன் கல்வியை அறிமுகம் செய்யும் நோக்கில் 250 பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர் தரத்திற்கு தொழிநுட்ப துறையை அறிமுகம் செய்துள்ளதுடன், 2013 ஆம் ஆண்டில் 13,000 மாணவர்கள் தொழிநுட்பத் துறை பாடங்களைக் கற்க முன்வந்துள்ளனர். இதன் மூலம் க.பொ.த உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு, வர்த்தகப் பிரிவு மற்றும் தொழிநுட்ப பிரிவு மீதான மாணவர்களின் எண்ணிக்கையானது ஊக்குவிக்கப்படுவதுடன் கலைத்துறை மீதான நாட்டத்தைக் குறைத்து தொழிற் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் பாடவிதானங்கள் பல்வகைப்படுத்தப்படும்.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- உரிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை தயாரிப்பதில் உரிய அமைச்சுக்களுக்கு தேவையான தொழிநுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

- கல்வித் துறைக்கான ஐந்தாண்டு கால கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான 2013 – 2017 காலப் பகுதிக்கான வேலைச் சட்டகம் தயாரிப்பதற்கான ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கான கல்வி மற்றும் உயர் கல்வி அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

- 2014 – 2016 முன்னுரிமை அடிப்படையில் அடையாளங் காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில் துறை ரீதியான அபிவிருத்தி உள்ளீட்டு வெளியீட்டு குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டன.

- 2014 – 2016 இற்கான பொது முதலீட்டு அட்டவணை தயாரிக்கப்பட்டது.

- 2012 ஆண்டறிக்கைக்கு கல்வித் துறை மறுசீரமைப்பு தொடரபான உப அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

- கல்வித் துறையின் அபிவிருத்தி தொடர்பான சுருக்கமான விளக்கம் ஒன்று “தேசத்திற்கு மகுடம் 2013” துண்டுப் பிரசுரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- அமைச்சுக்களினால் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட முன்மொழிவுகளையும் உள்ளடக்கி கருத்திட்ட கையிருப்பானது புதுப்பிக்கப்பட்டது.

- கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 59 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு வழங்கப்பட்டது.

- கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 58 புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- இப்பிரிவின் அதிகாரிகள், இயக்குனர் சபை கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், கொள்கை மீளாய்வுக் கூட்டங்கள் உட்பட 40 கூட்டங்களில் பங்குபற்றியுள்ளனர்.

- பல்கலைக்கழகங்களை அடிப்படையாகக் கொண்ட நகர அபிவிருத்தி கருத்திட்டத்தை தயாரிப்பதில் உயர் கல்வி அமைச்சிற்கு தொழிநுட்ப உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு அதனை அமுல்படுத்துவது தொடர்பான பொறிமுறையை தயாரிப்பதற்கு உரிய பங்காளர்களுடன் விஷேட கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன.

**தொழிற் கல்வி**

பொருளாதார வளர்ச்சியின் காரணமாக புதிதாக உருவாகி வரும் தொழிற் சந்தைக் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு உயர் திறன் கொண்ட தொழிற் படையென்பது இன்றியமையாததாகும். 2020 ஆம் ஆண்டின் போது அரசாங்கமானது 175,000 தேசிய தொழிற் சான்றிதழ் பெற்றவர்கள் உட்பட 250,000 திறன் கொண்ட இளைஞர்களை வருடாந்தம் உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- 06 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அமுல்படுத்தலுக்கான சிபாரிசு செய்யப்பட்டது. மதிப்பீட்டு அறிக்கையானது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பப்பட்டது.

- இளைஞர் விவகார மற்றும் தொழிற் திறன் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 13 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கான அத்தியாயம் 7.2 திறன் கல்வி என்ற தலைப்பில் எழுதப்பட்டது,

- தற்போதுள்ள தொழிற்கல்வி முறையில் சாதகமான மாற்றங்களைக் கொண்டு வரும் நோக்கில் தொழிற் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 – 2016

தயாரிப்பதற்காக நாட்டிற்கான அபிவிருத்தி பங்காளிகள், மற்றம் அரச மற்றும் தனியார்த்துறை தொழிற் கல்வி பயிற்சி வழங்குனர்களுடன் பல சுற்று கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

- 2014 – 2020 தொழிற்கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான கொரிய நிறுவகம், சிடா மற்றும் அவுஸ்எய்ட் நிறுவனங்களுடன் பல சுற்று கலந்துரையாடல்கள இடம்பெற்றன.

- "தேசத்திற்கு மகுடம்" துண்டுப் பிரசுரத்திற்கு உரிய தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

### 3.7. சுற்றாடல், தொழிநுட்ப ஆராய்ச்சி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை

**சூழல் மற்றும் மீள் புதுப்பிக்கப்பட்ட சக்தி வளங்கள்**

துரித பொருளாதார அபிவிருத்தி மற்றும் அடிக்கடி மாறி வரும் காலநிலை மாற்றங்கள் என்பவற்றின் காரணமாக சூழலானது பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. 2013 ஆம் ஆண்டில் சூழல் துறையானது மகிந்த சிந்தனையின் இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் நிலம், தாவரங்கள், விலங்குகள் என்பவற்றினைப் **பேணி** நிலைபேறான அபிவிருத்தியை அடையும் அதே வேளை சூழலை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தியது. தேசிய திட்டமிடல் திணைக்களமானது இது தொடர்பில் கலந்துரையாடல்கள், கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் நேரடியாக பங்குபற்றி உரிய வழிகாட்டல்களையும் பெற்றுக் கொடுத்துள்ளது. கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்யும் போது காலநிலை மாற்றத்தின் தாக்கம், **திண்**மக் கழிவுகளின் முகாமை, உயிரியல் பல்வகைத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் வனவாக்கல் என்பனவற்றிற்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி**

தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி துறையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதே அரசாங்கத்தின் இலக்காகும். அதி உயர் தொழிநுட்ப கைத்தொழிநுட்ப மயமாக்கலானது நாட்டை துரித பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். உள்ளூர் கைத்தொழில் நிறுவனங்களின் தரம், உற்பத்தித்திறன் மற்றும் போட்டித் தன்மையை அதிகரிக்கும் நோக்கில் நாட்டில் உயர் தொழிநுட்ப கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உணவு பதனிடல், **இழைய வளர்ப்பு**, பசளை உற்பத்தி போன்ற கைத்தொழில்களுக்கு பெறுமதி சேர்க்கும் நோக்கில் நனோ தொழிநுட்பம், நுண்ணுயிர் தொழிநுட்பம் உள்ளடங்களாக அதி உயர் தொழிநுட்பங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியானது மேற்கொள்ளப்பட்டது.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் **கூட்டமைப்பினால்** சமர்ப்பிக்கப்பட்ட 11 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- 3 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடலில் பங்குபற்றியது.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2012 ஆம் ஆண்டு ஆண்டறிக்கைக்கு தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான அத்தியாயத்தை தயாரிப்பதற்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- "Unstoppable Sri Lanka 2020" பொது முதலீட்டு உபாயம் பிரசுரத்திற்கு "புதுமையாக்கம் மற்றும் ஆராய்ச்சி கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்பல்" எனும் தலைப்பில் தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

**அனர்த்த முகாமைத்துவம்**

அனர்த்தங்களானது திடீரென ஏற்படும் விபத்துக்கள் அல்லது இயற்கை அனர்த்தங்களாகும். இவை பெருமளவில் மனித உயிர்களை காவு கொள்வதோடு சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கக்கூடியவை. இலங்கை முகம்கொடுக்கும் பிரதானமான இயற்கை அனர்த்தங்களாவன வெள்ளப் பெருக்கு, வரட்சி, மண் சரிவு, இடி மின்னல் மற்றும் வேகமான காற்று என்பவையாகும். சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் துரித அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற மனிதனின் நடவடிக்கைகள் காரணமாக இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் சுழற்சியானது கடந்த இரண்டு தசாப்தங்களில் அதிகரித்துச் சென்றுள்ளது. வருடாந்தம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பொருளாதார இழப்பீடானது ஐ.அ.டொ 50 – 60 மில்லியன்களாகும். ஆகவே மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களை அழிவில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் அனரத்தங்களுக்கு பிந்திய முகாமையை விட அனர்த்தங்களின் தாக்கத்தைக் குறைக்கும் வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மீது கூடுதல் முதலீடு செய்யப்படுகின்றது.

**வன வளங்களைப் பாதுகாத்தல்**

காணிப் பாவனை முறையில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அதிகரித்து வரும் காணித் தேவை என்பன மனிதன் வன ஜீவராசிகளின் இருப்பிடங்களை அபகரித்துள்ளமையானது பிரதானமாக யானை மனித மோதலுக்கு காரணமாய் அமைந்துள்ளது. கடந்த சில தசாப்தங்களில் யானை மனித மோதல் உக்கிரமடைந்து, அது பல மனித மற்றும் யானைகளின் உயிர்களையும் கொன்றுள்ளது. ஆகவே யானை – மனித முறுகலை குறைத்தல், வன ஜீவராசிகளை பாதுகாத்தல் மற்றம் சூழல் சார்பான சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் ஒரு முழுமையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உப பிரிவுகளுடன் தொடர்புபட்ட 46 கருத்திட்ட முன்மொழிவுகள் உரிய அமைச்சுக்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்டன. கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன. மாவட்ட மட்டத்தில் காணப்பட வேண்டிய காடுகளின் இருப்பு, பிலிசரு திண்ம கழிவு முகாமைத்துவ திட்டத்தின் காலத்தை நீடித்தல், மிகவும் செயற்றிறனாகவும் மற்றும் வினைத்திறனாகவும் நுகர்வுக்கு பிந்திய பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் மற்றும் உலக வங்கியின் உதவியுடன் காலநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுப்பதற்கான கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளாகும்.

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 26 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு வழங்கப்பட்டது.

- ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி மற்றும் ஏனைய அபிவிருத்தி பங்காளர்களுடனான கருத்திட்டங்கள் மீதான **தொடக்க** கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டமை மற்றும் நிதி அளிப்பு நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் பங்காளர்களுடன் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- சுற்றாடல் மற்றும் மின்சக்தி வள அமைச்சு மற்றும் அனர்த்த முகாமை அமைச்சு என்பவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட 7 கருத்தரங்குகள், 10 கூட்டங்களில் பங்குபற்றியது.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- 2014 – 2016 பொது முதலீட்டு உபாயத்தை தயாரிப்பதற்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு கருத்திட்ட இருப்பும் தயாரிக்கப்பட்டது.

**சுற்றுலாத்துறை**

தற்போது சுற்றுலாத்துறையே நாட்டில் ஆறாவது வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் கைத்தொழிலாகும். 2013 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ 1.715 மில்லியன்களை வருமானமாக உழைத்துள்ளது.

2013 ஆம் ஆண்டின் இறுதியின் போது இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியளிக்கக்கூடிய வகையில் 16,223 சுற்றுலா அறைகள் காணப்பட்டது. ஒரு சுற்றுலா பயணியின் ஒரு நாளைய சராசரி செலவீனம் ஐ.அ.டொ. 156.5 ஆகும். 2013 ஆம் ஆண்டில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.27 மில்லியன்களாகும்.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- உரிய கொள்கைகளை உருவாக்கல் மற்றும் வழிகாட்டல்களை வழங்கி சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் பங்களிப்புச் செய்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட இரண்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- சுற்றுலாத்துறைக்கான 2014 – 2016 பொது முதலீட்டு உபாயம் தயாரிக்கப்பட்டது. “Unstoppable Sri Lanka 2020” பிரசுரத்திற்கு “சூழல் நட்பான நிலைபேறான சுற்றுலாத்துறை” என்ற தலைப்பில் கட்டுரை தயாரிக்கப்பட்டது.

**மீன் பிடித்துறை**

2013 ஆம் ஆண்டில் மீன் பிடித்துறை மீதான மொத்த செலவீனம் ரூபா 2,268.3 மில்லியன்களாகும். இதில் ரூபா 1,314 மில்லியன்கள் மூலதனச் செலவீனமாகும். இத்துறை அபிவிருத்தி சாதகத் தன்மைகளை அடையாளம் கண்டு மீன்பிடித் துறைமுகங்களின் படகுகள்

நங்கூரமிடும் தளங்கள், படகு தரிப்பிடங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு புனரமைத்தல், களஞ்சிய வசதிகள் மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகள், கரையோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடிக்கான மீன்பிடிக் கப்பல்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள், நிதி வசதிகள், மற்றும் அலங்கார மற்றும் **நன்**னீர் மீன்பிடி மற்றும் மீனவர் சமூகத்தின் வீடமைப்பு போன்ற விடயங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட “Unstoppable Sri Lanka 2020” பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 ஆவணத்திற்கு “நவீன மீன்பிடி கைத்தொழிலை நோக்கி” என்ற தலைப்பில் உப அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

- 2013 ஆம் வருட காலப்பகுதியில் 06 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- 2013 ஆம் ஆண்டில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

## 3.8. பேரண்ட பொருளாதாரம், சமூக பாதுகாப்பு, தொழில் மற்றும் சிறைச்சாலைகள்

**தொழில் மற்றும் பேரண்ட பொருளாதார திட்டமிடல்**

பேரண்ட பொருளாதார கொள்கைகளைத் தயாரித்தல், நடைமுறை பேரண்ட பொருளாதார பிரச்சினைகளை அடையாளங் காணல் மீளாய்வு செய்தல் மற்றும் பொருத்தமான சிபாரிசுகளைச் செய்தல் போன்றன பேரண்ட பொருளாதார மற்றும் தொழில் பிரிவின் பொறுப்புக்களாகும். இப்பிரிவானது மொத்த உள்நாட்டு உற்பத்தி, வேலைவாய்ப்பு, பண வீக்கம், சென்மதி நிலுவை போன்ற பேரண்ட பொருளாதார மாறிகளை கையாள்கின்றது.

இப்பிரிவானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப உதவியுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் திட்டமிடல் செயற்பாட்டு இயலளவை மேம்படுத்தும் நோக்குடன் உள்ளீட்டு வெளியீட்டு அட்டவணையை தயாரித்தல் மற்றும் இலங்கைக்கான நிலன் விலை தயாரிப்பு போன்ற பயிற்சிகள் மற்றும் கூட்டங்களை ஒழுங்குபடுத்துகின்றது. தொழிற் பிரிவினது தொழில் உறவு, தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், உற்பத்தித் திறன் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சேம நலன் போன்றவற்றை திட்டமிடுவதில் கவனம் செலுத்தியது.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- 2012 ஆம் ஆண்டின் நிதித் திட்டமிடல் திணைக்களத்தின் ஆண்டறிக்கையை தயாரிப்பதற்கு உரிய உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- “தேசத்திற்கு மகுடம்” நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக குருநாகல் மாவட்டத்திற்கான முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- பொது முதலீட்டுத் திட்டத்தை தயாரிப்பதில் பங்களிப்புச் செய்யப்பட்டது.

- 2013 – 2015 நடுத்தர கால வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதில் பங்களிப்புச் செய்யப்பட்டது.

- 2013 – 2015 காலப்பகுதிக்கான பிரதான பேரண்ட பொருளாதார இலக்குகள் அடையாளம் காணப்பட்டு தயாரிக்கப்பட்டன.

- ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கூட்டங்கள், உள்ளீட்டு வெளியீட்டு அட்டவணை தயாரித்தல் கூட்டங்கள் மற்றும் கொள**கைக்**ளை திட்டமிடல் மற்றும் உருவாக்கல் கூட்டங்களில் பங்குபற்றியது.

- தேசிய மனித வள கொள்கை உருவாக்கலுக்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- நன்கொடையாளர் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**பிராந்திய அபிவிருத்தி**

கடந்த தசாப்தங்களில் கிராமிய அபிவிருத்தி தொடர்பில் பின்பற்றப்பட்ட பிழையான மற்றும் முழுமையற்ற கொள்கை அனுகுமுறைகள் மற்றும் முழுமையான அபிவிருத்தி செயற்பாட்டில் காணப்பட்ட நகர சார்புத்தன்மை என்பன அடையாளம் காணப்பட்டு அரசாங்கமானது குடும்பம் - கிராமம் - நகரம் - பிராந்தியம் என்பவற்றை பிரதான பொருளாதார செயற்பாட்டுக்குள் இணைத்து சர்வதேச சந்தையை அடையக்கூடிய வகையிலான ஒரு புதிய ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தி அ**ணு**குமுறையை ஆரம்பித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய பிராந்திய அபிவிருத்தி முறையானது மரபு ரீதியாக பின்பற்றப்பட்ட முறையான அ**ணு**குமுறையான பிராந்தியங்களின் மேம்பாட்டிற்கான நிதிப் பரிமாற்றத்திற்கு மாற்றமாக பிராந்தியத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு அப்பிராந்தியத்துள் காணப்படும் மூல வளங்களை உரிய முறையில் வழிப்படுத்துவதன் சாத்தியத் தன்மை மீது நம்பிக்கை கொண்டுள்ளது. அரசாங்கத்தின் பிரதான தலையீடானது பிராந்திய அபிவிருத்தியில் பங்குபற்றும் அனைத்து பங்குதாரர்களிடத்திலும் அதிகூடிய சேர்க்கையை உறுதி செய்வதற்கு அவசியமான சாத்தியமான மூல வளங்களை அடையாளம் காணல் மற்றும் வழிப்படுத்தலுமாகும்.

பிராந்திய மக்கள் அனைவரினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அனைத்து பிராந்தியங்களையும் ஒரு சமாந்தரமான அபிவிருத்தியை நோக்கி வழிநடாத்தும் வகையில் பிராந்தியங்களுக்கிடையிலான போக்குவரத்து தொடர்பை அதிகரித்தல், பிரதான வீதி வலையமைப்புடன் பிராந்தியங்களை இணைத்து பிராந்திய ஏற்றத்தாழ்வினை நீக்குதல் போன்ற உபாயங்களுக்கு அரசாங்கம் தனது அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் அதி முக்கியத்துவம் அளித்துள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைச் சட்டகமானது பல ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. அவையாவன கம நகும, திவி நகும, புர நகும மற்றும் ஒன்பது பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- "தேசத்திற்கு மகுடம் 2013" தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கான துண்டுப் பிரசுரத்தை தயாரிப்பதற்கான தொழிநு ட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- "தேசத்திற்கு மகுடம் 2014" தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கு சமாந்தரமாக குருநாகல், கேகாலை மற்றும் புத்தளம் மாவட்டங்களுக்கான மாவட்ட அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டது.

- மாவட்டங்களில் காணப்படும் அபிவிருத்தி இடைவெளிகளை அடையாளம் கண்டு மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்காக மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்களுடனான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- பொருளாதார அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 7 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- புரநகும நிகழ்ச்சித்திட்டத்தின் வழி நடாத்தல் குழுக்கூட்டத்தில் பங்குபற்றியது.

- "Unstoppable Sri Lanka 2020" பொது முதலீட்டு உபாயம் 2014 – 2016 பிரசுரத்திற்கு "கிராமங்களை வழுவூட்டல்" என்ற தலைப்பில் அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.

### 3.9. பொதுத்துறை முகாமை

பொதுச் சேவைகளை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் வழங்கப்பட வேண்டுமாயின் நாட்டின் பொது நிர்வாகத் துறையானது தொடர்ந்தும் மேம்படுத்தப்படல் வேண்டும். நாட்டின் அபிவிருத்தியில் தனியார் துறையினரின் பங்களிப்பை மேலும் அதிகரிப்பதற்கு உதவியாயிருப்பதில் அரச துறையானது ஒரு முக்கியமான பங்காற்றுகின்றது என்பதை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. சேவை வழங்களின் வினைத்திறனை மற்றும் செயற்றிறனை மேம்படுத்தும் நோக்கில் மனித மற்றும் பௌதீக வளங்களின் இயலளவை அதிகரிப்பதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. தேசிய திட்டமிடல் திணைக்களமானது பொதுத் துறையின் மேம்பாட்டிற்கு பின்வரும் வகையில் கடந்த வருடம் பங்களிப்புச் செய்துள்ளது.

- பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, நிதி அமைச்சு, சிரேஷ்ட அமைச்சர்கள் காரியாலயம், சிறைகள் மறுசீரமைப்பு அமைச்சு போன்ற அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 27 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- பொது நிர்வாக முகாமைத்துவ பிரிவிற்கு பல்வேறு அமைச்சுக்களினாலும் கிடைக்கப் பெற்ற 28 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- இத்துறையுடன் தொடர்புபட்ட பல்வேறு நிறுவனங்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் வழிநடாத்தல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றி பொது நிர்வாகத்துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.

- அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வேலைச் சட்டகத்திற்கு உட்பட்டவாறு இத்துறையின் செயலாற்றுகையை மேம்படுத்துவது தொடர்பாக உரிய அமைச்சுக்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.
- வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுடன் கருத்திட்டங்கள் தொடர்பில் ஆரம்ப கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.
- “தேசத்திற்கு மகுடம்” தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக்கான துண்டுப் பிரசுரத்திற்கு அவசியமான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**4. தகவல் அபிவிருத்திக்கான நிலையம்**

**நூலகத்தின் ஒழுங்கமைப்பு**

I. உள்வரும் நூல்களை பெற்றுக்கொள்ளலும் வகைப்படுத்தலும்.

II. பருவகால இதழ்களை சீர் செய்தல்.

III. பாவனையாளர்களுக்கு பாவனைக்கு கிடைப்பதற்கு முன்பு அவற்றை செயன்முறைக்கு உட்படுத்தல்.

IV. நூலகத்தின் புத்தக இருப்பை மீள் ஒழுங்கு செய்தல்.

**பகிர்வு, விசாரணை மற்றும் தேடல் சேவைகள்**

I. தகவல் தேவைக்கான விசாரணைகளுக்கு கவனம் செலுத்துதல்.

II. கணனி தகவல் அடிப்படையில் விசாரணைகளுக்கு அவசியமான உசாத்துணை நூல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

III. நூல்கள் பகிர்வுக்கு கணனி மயப்படுத்தப்பட்ட முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்து பராமரித்தல்.

IV. பருவகால சஞ்சிகை மற்றும் பத்திரிகை கட்டுரைகளை இலக்கமிடல்.

V. பாவனையாளர்களின் தேவைக்கு ஏற்ப செய்திகளை மற்றும் கட்டுரைகளை பிரதி செய்து இலத்திரனியல் ஆவணங்களாக வழங்குதல்.

**ஏனைய நூலகங்களுடன் ஒருங்கிணைப்பு**

I. பருவகால சஞ்சிகைகளின் பட்டியலை புதுப்பித்த பராமரித்தல்.

II. தேசிய நூலகம் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் என்பவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏனைய பங்குபற்றல் வலையமைப்புக்களுக்கு உட்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை பயன்படுத்தி நுழைவுகள் தயாரிக்கப்பட்டன.

III. இலத்திரனியல் தகவல் ஊடகங்களின் அடிப்படையில் நூலகங்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் பராமரிக்கப்பட்டன.

**இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளூர் வலையமைப்பில் இணைத்துக்கொள்ளல்**

I. நிதித் திட்டமிடல் அமைச்சின் இணையத்தளத்திற்கு புதிய செய்திகள் மற்றும் புதிய வருகைகள் தொடர்பான தகவல்களை வழங்கி பங்களிப்புச் செய்கின்றது.

II. இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதாரம் மற்றும் வங்கியியல் நூலக வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (இலத்திரனியல் - வங்கி வலையமைப்பு) மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சிலிஸ்நெட் வலையமைப்பில் பங்குபற்றியது.

III. தேசிய நூலக வலையமைப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

## 5. மனிதவள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம்

**31.12.2013 இல் திணைக்களத்தின் ஆளணி**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. சீ. விஜேவர்தன | பணிப்பாளர் நாயகம் |
| 2 | திரு. எஸ்.எஸ். முதலிகே | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 3 | திருமதி. எம். கங்காதரன் | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 4 | திருமதி. எஸ்.டீ. ரத்னாயக்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 5 | திரு. கே.டீ.எஸ்.ஆர். பெரேரா | பணிப்பாளர் |
| 6 | செல்வி. என். விஜேவீர | பணிப்பாளர் (நிதி) |
| 7 | திரு. என்.யூ.என். மெண்டிஸ் | பணிப்பாளர் |
| 8 | திரு. யூ.என். மல்லவாராச்சி | பணிப்பாளர் |
| 9 | திருமதி. சீ. சேனாநாயக்க | பணிப்பாளர் |
| 10 | திரு. டீ.ஏ.டீ.டீ. பிரேமரத்ன | பணிப்பாளர் |
| 11 | திரு. டீ.எம்.ஜே. பண்டார | பணிப்பாளர் |
| 12 | திரு. எம்.எப். முபாரக் | பணிப்பாளர் |
| 13 | திருமதி. பீ.எச். சந்திமா | உதவிப் பணிப்பாளர் |
| 14 | திருமதி. டீ.ஏ. நிஹரேபொல | உதவிப் பணிப்பாளர் |
| 15 | திரு. ஆர்.கே.எம்.என்.என். பலிபான | உதவிப் பணிப்பாளர் |
| 16 | திரு. பீ.எம்.எஸ். ஜயதிலக்க | உதவிப் பணிப்பாளர் |
| 17 | திரு. கே.என்.பீ. ஜயரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 18 | திரு. டீ.எம்.டீ.பீ. தென்னகோன் | உதவிப் பணிப்பாளர் |
| 19 | திருமதி. டப்லியு.எல்.பீ. பெனான்டோ | உதவிப் பணிப்பாளர் |
| 20 | திருமதி. ஆர்.கே.எல். ஜாகொட | உதவிப் பணிப்பாளர் |
| 21 | திருமதி. டீ.வை.எல். முனசிங்ஹ | உதவிப் பணிப்பாளர் |
| 22 | திரு. ஆர்.டீ.ஏ. மைத்ரீரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 23 | திருமதி. ஜீ.ஆர்.சீ. ஹேவாவாசம் | உதவிப் பணிப்பாளர் |
| 24 | திருமதி. எம்.ஏ.ஜீ. துஷாரி | உதவிப் பணிப்பாளர் |
| 25 | திருமதி. ஈ.ஏ.சீ.டீ. பீரிஸ் | உதவிப் பணிப்பாளர் |
| 26 | திருமதி. ஐ. லங்காதிலக்க | உதவிப் பணிப்பாளர் |
| 27 | திருமதி. டப்லியு.ஏ.ஜே.சீ. விக்ரம ஆராச்சி | உதவிப் பணிப்பாளர் |
| 28 | திருமதி. டீ.ஏ. மனோரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 29 | திருமதி. டப்லியு.ஏ. வல்பிட்ட | உதவிப் பணிப்பாளர் |
| 30 | செல்வி. டீ.எச்.ஆர்.டீ. விஜேவர்தன | உதவிப் பணிப்பாளர் |

| | | |
|---|---|---|
| 31 | திரு. கே.ஜீ.ஆர்.ஜீ.ஆர். விக்ரமவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 32 | திருமதி. என்.டீ. அமரதுங்க | உதவிப் பணிப்பாளர் |
| 33 | திரு. டீ.பீ.எஸ்.எம். தயாசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 34 | திரு. ஜீ. அருனன் | உதவிப் பணிப்பாளர் |
| 35 | திரு. கே.பீ.எஸ்.எஸ். பெனான்டோ | உதவிப் பணிப்பாளர் |
| 36 | திரு. வீ.சீ. விஜேவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 37 | திரு. ஆர்.ஜீ.பீ. டீ சில்வா | உதவிப் பணிப்பாளர் |
| 38 | செல்வி. யூ.ஏ.டப்லியு.எல். சுமனசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 39 | செல்வி. கே.டீ.சீ. தமராசி | உதவிப் பணிப்பாளர் |
| 40 | திருமதி. டப்லியு.எம். ஹன்சனி | உதவிப் பணிப்பாளர் |
| 41 | செல்வி. எம்.ஜீ.பீ.கே.டீ. குணவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 42 | செல்வி. பீ.ஏ. நிஷாதி லக்ஷிலா | உதவிப் பணிப்பாளர் |
| 43 | செல்வி. எம்.ஏ.எஸ். தாபரேரா | உதவிப் பணிப்பாளர் |
| 44 | செல்வி. பீ.ஏ.என். அபேசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 45 | திருமதி. ஆர்.டீ.ஏ. லக்சுமி | நிர்வா உத்தியோகத்தர் |
| 46 | திரு. எச்.எம்.ஆர்.ஏ. பண்டார | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 47 | திருமதி. எஸ்.டீ.ஐ. ஆராச்சிகே | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 48 | திரு. ஈ.என்.கே.ஜீ.கே.எம். ஏக்கநாயக்க | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 49 | திருமதி. எஸ்.டீ. சாமனி பிரியங்கா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 50 | திருமதி. எச்.எம்.எஸ். ஹேரத் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 51 | திருமதி. எஸ்.ஏ.ஜீ.சீ. ஜயசேகர | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 52 | செல்வி. டப்லியு.என்.ஆர். சந்திமா லலனி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 53 | திரு. டப்லியு. டீ. துஷார | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 54 | திருமதி. ஜே.எம்.ஏ.கே. ஜயசேகர | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 55 | திருமதி. ஏ.ஆர். சந்திரா பத்மினி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 56 | திருமதி. கே.ஜீ.பீ. தமயந்தி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 57 | திருமதி. பீ.கே.கே.ஆர். ராஜகருன | முகாமைத்துவ உதவியாளர் I |
| 58 | திருமதி. ஜே.ஏ.டீ.சீ. ஜயகொடி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 59 | திருமதி. டப்லியு.டீ.பீ. பெனான்டோ | முகாமைத்துவ உதவியாளர் II |
| 60 | திரு. எச்.ஜீ.ஜீ. நிமால் | முகாமைத்துவ உதவியாளர் II |
| 61 | செல்வி. ஆர்.எம். பத்மசீலி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 62 | திருமதி. ஆர்.ஏ.டீ.கே. ராஜபக்ஷ | முகாமைத்துவ உதவியாளர் II |
| 63 | திரு. எம். சுரங்க ரனசிங்க | முகாமைத்துவ உதவியாளர் II |
| 64 | செல்வி. கே.எல்.டப்லியு.சீ.எல். டீ சில்வா | முகாமைத்துவ உதவியாளர் II |
| 65 | திரு. பீ.எஸ்.ஆர். பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் II |
| 66 | திரு. என்.ஆர். ஹெட்டி ஆராச்சி | காரியாலய உதவியாளர்I |
| 67 | திரு. எம்.டீ.ஆர். பெனான்டோ | காரியாலய உதவியாளரI |
| 68 | திரு. யூ.யூ. ரத்னகுமார | காரியாலய உதவியாளரI |
| 69 | திரு. எம்.ஏ.எல். நலின் | காரியாலய உதவியாளரI |
| 70 | திரு. டீ. பிரியந்த | காரியாலய உதவியாளரII |
| 71 | திரு. ஏ.எம்.ஆர்.எஸ்.டீ. குமார | காரியாலய உதவியாளரII |
| 72 | திரு. ஆர்.ஏ.பீ. புஷ்பகுமார | காரியாலய உதவியாளரII |
| 73 | திரு. டீ.ஏ.என். சந்திரதிலக்க | காரியாலய உதவியாளரII |
| 74 | திரு. ஜீ.எஸ். ரோஹன | காரியாலய உதவியாளரII |
| 75 | திரு. டப்லியு.எம். ஜினதாச | காரியாலய உதவியாளரII |
| 76 | திரு. என்.எஸ்.யூ.கே. சில்வா | காரியாலய உதவியாளரII |
| 77 | திரு. எம்.பீ.ஆர். ரத்னாயக்க | காரியாலய உதவியாளரII |
| 78 | திரு. எம்.சீ. பதீப் | காரியாலய உதவியாளரII |
| 79 | திரு. பீ.எஸ்.கே. பெரேரா | காரியாலய உதவியாளரIII |
| 80 | திரு. கே.கே.சீ. கரஸ்னகல | காரியாலய உதவியாளரIII |
| 81 | திரு. எம்.ஏ.எஸ்.கே. ஜயவர்தன | சாரதி I |

| | | |
|---|---|---|
| 82 | திரு. கே.பீ. கரவிட்ட | சாரதி I |
| 83 | திரு. ஆனந்த விஜேதுங்க | சாரதி I |
| 84 | திரு. டப்லியு.எம்.என். கருணாதிலக்க | சாரதி II ஏ |
| 85 | திரு. கே.ஜே. குமாரசிங்க | சாரதி II ஏ |
| 86 | திரு. டீ.பீ. திஸாநாயக்க | சாரதி II ஏ |
| 87 | திரு. பீ.டீ.டீ. புஷ்பகுமார | சாரதி II ஏ |
| 88 | திரு. டீ.எம்.டீ. ஷிரோன் | சாரதி II ஏ |
| 89 | திரு. ஜே.ஜீ.யூ. விமலசிரி | சாரதி II ஏ |
| 90 | திரு. பீ.எஸ். ஆனந்த | சாரதி II ஏ |
| 91 | திரு. எஸ். ஜயசூரிய | சாரதி II ஏ |
| 92 | திரு. டீ.ஜீ.பீ. சமந்த | சாரதி II பீ |
| 93 | திரு. டீ. ரத்னசிரி | சாரதி II பீ |

**புதிய நியமனங்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. கே.பீ.எஸ்.எஸ். பெனான்டோ | உதவிப் பணிப்பாளர் |
| 2 | திரு. வீ.சீ. விஜேவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 3 | திரு. எல்.எச்.எம்.ஆர்.பீ. லன்சாகர | உதவிப் பணிப்பாளர் |
| 4 | திரு. ஆர்.ஜீ.பீ. டீ சில்வா | உதவிப் பணிப்பாளர் |
| 5 | செல்வி. யூ.ஏ.டப்லியு.எல். சுமனசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 6 | செல்வி. கே.டீ.சீ. தமராசி | உதவிப் பணிப்பாளர் |
| 7 | திருமதி. டப்லியு.எம். ஹன்சனி | உதவிப் பணிப்பாளர் |
| 8 | செல்வி. எம்.ஜீ.பீ.கே.டீ. குணவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 9 | செல்வி. பீ.ஏ. நிஷாதி லக்ஷிலா | உதவிப் பணிப்பாளர் |
| 10 | செல்வி. எம்.ஏ.எஸ். தாபரேரா | உதவிப் பணிப்பாளர் |
| 11 | செல்வி. பீ.ஏ.என். அபேசேகர | உதவிப் பணிப்பாளர் |
| 12 | திரு. டப்லியு.டீ. துஷார | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 13 | திருமதி. ஜே.எம்.ஏ.கே. ஜயசேகர | அபிவிருத்தி உத்தியோகத்தர் |

**பதவி உயர்வுகள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. சீ. விஜேவர்தன | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 2 | திரு. எஸ்.எஸ். முதலிகே | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 3 | திரு. டப்லியு.டீ.எஸ். குணசிங்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 4 | திருமதி. எம். கங்காதரன் | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |

**இணைப்பாளர்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. எச்.ஜீ. மாலனி | பணிப்பாளர் நாயகம் |

**திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தவர்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.டீ. ரத்னாயக்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 2 | திரு. என்.யூ.என். மென்டிஸ் | பணிப்பாளர் |
| 3 | திரு. யூ.என். மல்லவாராச்சி | பணிப்பாளர் |
| 4 | செல்வி. டப்லியு.என்.ஆர். சந்திமா லலனி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |

| | | |
|---|---|---|
| 5 | திருமதி. கே.ஜீ.பீ. தமயந்தி | முகாமைத்துவ உதவியாளர் I |
| 6 | திருமதி. ஜே.ஏ.டீ.சீ. ஜயகொடி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 7 | திரு. ஜே.ஜீ.யூ. விமலசிரி | சாரதி II ஏ |
| 8 | திரு. எஸ். ஜயசூரிய | சாரதி II ஏ |
| 9 | திரு. டீ.ஜீ.பீ. சமந்த | சாரதி II பீ |
| 10 | திரு. பீ.எல்.யூ. லியனகே | சாரதி II ஏ |
| 11 | திரு. என்.ஆர். ஹெட்டி ஆராச்சி | காரியாலய உதவியாளர I |
| 12 | திரு. யூ.யூ. ரத்னகுமார | காரியாலய உதவியாளரI |
| 13 | திரு. எம்.சீ. பதீப் | காரியாலய உதவியாளர II |

**திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள்**

| இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. டப்லியு.டீ.எஸ். குணசிங்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 2 | செல்வி. கே.டீ.ஏ. முனசிங்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 3 | திருமதி. ஜே.ஏ.எஸ். ரூபசிங்க | பணிப்பாளர் |
| 4 | திரு. ஈ.ஏ. ரத்னசீல | பணிப்பாளர் |
| 5 | திருமதி. என்.எம்.ஏ.கே.கே. நவரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 6 | செல்வி. ஏ. கவிதா | உதவிப் பணிப்பாளர் |
| 7 | திருமதி. கே.ஏ.எச்.கே. பெரேரா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 8 | திருமதி. கே.ஏ.ஜீ. தில்ருக்ஷி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 9 | திருமதி. எஸ்.எம்.டீ.டீ. சமரகோன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 10 | திருமதி. ஏ. ராமநாயக்க | முகாமைத்துவ உதவியாளர் I |
| 11 | திருமதி. ஏ.எஸ்.எம்.வீ.ஏ. சந்திரானி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 12 | திருமதி. டப்லியு.என்.பீ. ஜயசிங்க | முகாமைத்துவ உதவியாளர் II |
| 13 | திருமதி. பீ.யூ. மதவத்தகே | முகாமைத்துவ உதவியாளர் II |
| 14 | திருமதி. ஜே.கே. ரோஹினி | முகாமைத்துவ உதவியாளர் II |
| 15 | திரு. எஸ். குணதாச | சாரதி II ஏ |
| 16 | திரு. கே.எம். கருணாசேன | சாரதி II ஏ |
| 17 | திரு. பீ.எல்.யூ. லியனகே | சாரதி II ஏ |
| 18 | திரு. எம்.கே. உபாலி நிஷாந்த | சாரதி II ஏ |

**வெளிநாட்டுப் பயிற்சிகள் - 2013**

(பணிப்பாளர் நாயகம் / மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள் / பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள் / நூலகர் / திட்டமிடல் உதவியாளர்கள் / ஆராய்ச்சி உதவியாளர்கள்)

| இல | பெயர் | பதவி | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நாடு | காலம் |
|---|---|---|---|---|
| 01 | திருமதி. சாந்தனி விஜேவர்தன | பணிப்பாளர் நாயகம் | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஆசிய தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம **புதுடில்லி, இந்தியா**<br><br>ஆரம்ப சிறார் பராமரிப்பு மற்றும் கல்வி தொடர்பான ஆசிய – பசுபிக் பிராந்திய | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கூட்டத் தொடர் **சியோல், தென் கொரியா**<br><br>ஆசிய பசுபிக் சங்கிலியின் 2020 உபாயம் நடுத்தர கால மீளாய்வு மற்றும் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் நீண்டகால உபாய நோக்கம் - நாட்டுக்கான ஆலோசனை **புதுடில்லி, இந்தியா**<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான இலத்திரனியல் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ மாற்றங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் - **சிங்கப்பூர்** | |
| 02 | திரு. சஞ்சய சேனாநாயக்க முதலிகே | மேலதிகப் பணிப்பாளர் | உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களில் அரச – தனியார் பங்குடமை கற்கைநெறி **சிங்கப்பூர்**<br><br>நான்காவது ஆசிய அரச தனியார் பங்குடமை தொழில் வல்லுனர்களின் அரச – தனியார் பங்குடமை அலகு தலைமைகளின் கூட்டம் **கொரியா** | |
| 03 | திருமதி. மலர்மதி கங்காதரன் | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | உபாய முகாமைத்துவம் பொதுக் கொள்கைக்கான லீக்வின்யூ பல்கலைக்கம் - **சிங்கப்பூர்**<br><br>இரண்டாவது தெற்காசிய தேசிய பெண்கள் கலந்துரையாடல் - **பூட்டான்**<br><br>இலங்கை சீனாவுக்கிடையில் வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பாக இரண்டு செயற்பாட்டுக் குழுக்களை உருவாக்குதல் - **சீனா**<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான இலத்திரனியல் நிர்வாகம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மற்றும் முகாமைத்துவ மாற்றங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் - **சிங்கப்பூர்** | |
| 04 | திருமதி. ஷிராந்தி தம்மிக ரத்நாயக்க | மேலதிக பணிப்பாளர் நாயகம் | நிறைவேற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நிதித் திட்டமிடல் அதிகாரிகளுக்கான பொருளாதார மற்றும் அரச கொள்கை - மூன்றாவது பயிற்சி நெறி –**சிங்கப்பூர்**<br><br>அறிவு திறன் பகிர்வு – 2013 இயலளவை கட்டியெழுப்புவதற்கான கருத்தரங்கு –**கொரியா, சியோல்** | |
| 05 | திரு. கே.டீ.எஸ்.ஆர். பெரேரா | பணிப்பாளர் | ரியோ மாநாட்டுக்கு பிந்திய காலப்பகுதியில் நிலைபேறான அபிவிருத்திக்கு அவசியமான அறிவு மற்றும் இயலளவுகள் தொடர்பான தேர்ச்சி பெற்றோரின் கலந்துரையாடல்கள் - **கொரியா**<br><br>ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார ஆணைக்குழுவின் 69 ஆவது கூட்டத்தொடர் தாய்லாந்து ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கீழ் மட்ட காபன் பசுமை வளர்ச்சி தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கியின் மாநாடு **பெங்களூர் - இந்தியா** | |
| 06 | திருமதி. சந்திரிக்கா சேனாநாயக்க | பணிப்பாளர் | பொதுத் துறையில் அதி உயர் தரமான பெறுபேற்று முகாமை – அபிவிருத்தி பெறுபேறுகளுக்கான அரச தனியார் பங்குடமை – **சிங்கப்பூர்** | |
| 07 | திரு. டீ.ஏ.டீ. தம்மிக பிரேமரத்ன | பணிப்பாளர் | ஆறாவது ஆசிய பசுபிக் பிராந்திய சனத்தொகை மாநாடு – பாங்கொக், தாய்லாந்து | |
| 08 | திரு. எம்.ஜே. பண்டார | பணிப்பாளர் | மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் சிறப்பு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தேர்ச்சியாளர்களின் குழுக் கூட்டம் - பேரண்ட பொருளாதாரத்திற்கான பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலின் கூட்டத் தொடர் - **ஜெனீவா**<br><br>தெற்கு ஆசியாவில் திட்டமிடலுக்கான முறைமைகள் - **காத்மண்டு, நேபால்** | |
| 09 | திரு. அஹமட் முபாரக் முஹம்மட் பளீல் | பணிப்பாளர் | பொருளாதார அபிவிருத்தி உபாயங்கள் (இலங்கை) பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - **கொரியா**<br><br>நிறைவேற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நிதித் திட்டமிடல் அதிகாரிகளுக்கான பொருளாதார மற்றும் அரச கொள்கை - மூன்றாவது பயிற்சி நெறி –**சிங்கப்பூர்** | |
| 10 | திரு. என்.வை.என். மெண்டிஸ் | பணிப்பாளர் | தாக்கங்களை மதிப்பீடு செய்தல் முறைகளும் அனுகுமுறைகளும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக்கான அழைப்பு – **பிலிப்பைன்ஸ், மனிலா** | |
| 11 | செல்வி. நிஷாந்தி விஜேவீர | பணிப்பாளர் (நிதி) | பிராந்திய பொருளாதார மற்றும் நிதி கண்காணிப்பு பயிற்சி நெறி **சியோல் - கொரியா** | |
| 12 | திருமதி. துனுகே அதிகாரம்லாகே க்ரிஷாந்தி திலானி பீரிஸ் | உதவிப் பணிப்பாளர் | இரண்டாம் நிலைக்கல்வியில் பால் சமத்துவத்திற்கான பிராந்திய கருத்தரங்கு – தொழில் வாய்ப்புக்கான தொழிநுட்ப, தொழிற்கல்வி பயிற்சி மற்றும் திறன் - **சீனா** | |
| 13 | திருமதி. வருனி அப்சரா வல்பிட்ட | உதவிப் பணிப்பாளர் | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான பேரண்ட பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு **– சீனா** | |
| 14 | செல்வி. தொட்டகெமுவகே யசந்தா லக்மினி முனசிங்க | உதவிப் பணிப்பாளர் | மாவட்ட செயலாளர்கள் திட்டமிடல் பிரதி பிரதம செயலாளர் மற்றும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்களுக்கான | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கல்விச் சுற்றுலா **– சீனா** | |
| 15 | திரு. ராஜபக்ஷ கருனாநாயக்க முதியன்சலாகே நிரங்க பலிபான | உதவிப் பணிப்பாளர் | பிராந்திய போக்குவரத்து முறைமை உற்சயமாக்கல் பயிற்சி நெறி – **சுசூகா – சீனா**<br><br>இலத்திறனியல் சலுகை: செயல்முறைகளும், கண்டுபிடிப்புக்களும் - **சிங்கப்பூர்** | |
| 16 | திரு. தென்னக்கோன் முதியன்சலாகே தனுஷ்கா பராக்கிரம தென்னக்கோன் | உதவிப் பணிப்பாளர் | ஏட்டாவது ஆசிய தூய்மையான சக்திவள மாநாடு –**பிலிப்பைன்ஸ்**<br><br>உயர்கல்விக்கான அவுஸ்திரேலிய அபிவிருத்தி புலமைப்பரிசில் - **அவுஸ்திரேலியா** | |
| 17 | திரு. கட்டுமெட்டிய நய்தலாகே பிரியங்கார ஜயரத்ன | உதவிப் பணிப்பாளர் | உயர்கல்விக்கான ஜப்பான் அபிவிருத்தி புலமைப்பரிசில் - **ஜப்பான்** | |
| 18 | திரு. கங்கனம் கமகே ரொஹான் கய ரம்ய விக்ரமவர்தன | உதவிப் பணிப்பாளர் | அணர்த்த முகாமை பயிற்சி – **ஜப்பான்**<br><br>உயிரியல் வாயு கைத்தொழில் ஊக்குவிப்பு மற்றும் முகாமைத்துவ கருத்தரங்கு **– சீனா**<br><br>ஆசியாவில் கீழ் மட்ட காபன் பசுமை வளர்ச்சி கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் **பங்களுர் - இந்தியா** | |
| 19 | திரு. ரன்பத்த தேவகே அசங்க தைத்திரீரத்ன | உதவிப் பணிப்பாளர் | உயர்கல்விக்கான ஜப்பான் அபிவிருத்தி புலமைப்பரிசில் - **ஜப்பான்** | |
| 20 | திருமதி. விக்ரம ஆராச்சிகே ஜயனீ சந்திமா விக்ரம ஆராச்சி | உதவிப் பணிப்பாளர் | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கொள்கை அபிவிருத்திக்கான நிபுணத்துவ உதவி – **தென் கொரியா**<br><br>உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகள் நிபுணத்துவம் கைமாற்றம் தொடர்பான கருத்தரங்கு **பீஜிங் - சீனா** | |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | திரு. பொத்திவல மாரகே சுனில் ஜயதிலக | உதவிப் பணிப்பாளர் | மிலேனிய அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நிலைபேறான வறுமை ஒழிப்பு –**சீனா** | |
| 22 | திருமதி. மல்லபி ஆராச்சிகே கீதா துஷாரி | உதவிப் பணிப்பாளர் | அறிவு மற்றும் நிபுணத்துவ பகிர்வு நிகழ்ச்சித்திட்டம் - **கொரியா**<br><br>விவசாய கொள்கை திட்டமிடல் பயிற்சிநெறி – **ஜப்பான்** | |
| 23 | திருமதி. தினுஷி அனுபமா மனோரத்ன | உதவிப் பணிப்பாளர் | உயர்கல்விக்கான ஜப்பான் அபிவிருத்தி புலமைப்பரிசில் - **ஜப்பான்** | |
| 24 | திருமதி. ராஜித கிசாகோத்தமி லங்காதிலக்க ஜாகொட | உதவிப் பணிப்பாளர் | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி போட்டித் தன்மை, சந்தைப்படுத்தல் மற்றும் பங்குடமை தொடர்பான அபிவிருத்தி அடைந்துவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஒத்துழைப்பு தொடர்பான பிராந்திய கண்ணோட்டம் - **இந்தியா** | |
| 25 | திருமதி. திஸ்னா அவந்தி நிஹரேபொல | உதவிப் பணிப்பாளர் | பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் தொடர்பான பிராந்திய கலந்துரையாடலில் பங்குபற்றுதல் - **தாய்லாந்து** | |
| 26 | திருமதி. தர்மசிரி பத்மகே சமித மதுஷான் தயாசேகர | உதவிப் பணிப்பாளர் | நிறைவேற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நிதித் திட்டமிடல் அதிகாரிகளுக்கான பொருளாதார மற்றும் அரச கொள்கை - மூன்றாவது பயிற்சி நெறி –**சிங்கப்பூர்** | |
| 27 | திரு. எச்.ஆர்.வீ.பீ. விஜேவர்தன | உதவிப் பணிப்பாளர் | பிராந்திய அபிவிருத்தி கல்விச் சுற்றுலா –**சீனா** | |
| 28 | திருமதி. இனோகா லங்காதிலக்க | உதவிப் பணிப்பாளர் | சீன சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அடிப்படை நிபுணத்துவம் தொடர்பான கருத்தரங்கு – **சீனா** | |

## 6. நிதித்துறை செயலாற்றுகை

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மொத்த செலவுகள் வருமானங்கள் மற்றும் மூலதனச் செலவுகளின் சுருக்கம் பின்வருமாறு

| | 2012 | | 2013 | | 2012 இன் உண்மைச் செலவு அடிப்படையில் வித்தியாசம்சத வீதத்தில் |
|---|---|---|---|---|---|
| | மொத்த ஒதுக்கம் (ரூபா) | மொத்த செலவு(ரூபா) | மொத்த ஒதுக்கம்(ரூபா) | மொத்த செலவு(ரூபா) | |
| மீண்டெழும் செலவு | 55,920,500 | 54,717,891 | 63,662,000 | 61,672,281 | -12.71 |
| மூலதன செலவு | 123,023,500 | 122,084,857 | 99,075,000 | 95,685,647 | 21.62 |
| மொத்தம் | **178,944,000** | **176,802,748** | **162,737,000** | **157,357,928** | **10.99** |

வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின்படி வழங்கப்பட்டுள்ள உபதிட்டங்களின் தகவல்கள் பின்வருமாறு

| உப திட்டம் | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | 2012 | | 2013 | | 2012 இன் உண்மைச் செலவு அடிப்படையில் வித்தியாசம் சத வீதத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்த ஒதுக்கம் (ரூபா) | மொத்த செலவு(ரூபா) | மொத்த ஒதுக்கம்(ரூபா) | மொத்த செலவு(ரூபா) | |
| | மீண்டெழும் செலவு | **55,920,500** | **54,717,891** | **63,662,000** | **61,672,281** | **-12.71** |
| 0 | பொதுநிர்வாகம | 52,586,500 | 52,343,576 | 60,889,400 | 59,006,251 | -12.73 |
| 2 | பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய மன்றம் | 3,334,000 | 2,374,315 | 2,772,600 | 2,666,030 | -12.29 |
| | மூலதன செலவு | **123,023,500** | **122,084,857** | **99,075,000** | **95,685,647** | **21.62** |
| 0 | பொதுநிர்வாகம | 2,120,000 | 1,886,554 | 7,210,000 | 6,854,642 | -263.34 |
| 2 | பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய மன்றம் | 229,500 | 229,500 | 215,000 | 211,950 | 7.65 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி கருத்திட்ட முகாமை (அரசாங்கம்/ ஜய்கா) | 63,645,000 | 63,521,959 | 43,200,000 | 41,911,950 | 34.02 |
| 8 | கிழக்குமாகாண கிராமிய வீதி அபிவிருத்தி கருத்திட்ட முகாமை (அரசாங்கம்/ ஜய்கா) | 53,779,000 | 53,761,809 | 32,890,000 | 32,874,202 | 38.85 |
| 12 | திடீர் இயற்கை அனர்த்த புணரமைப்பு திட்டம | 3,250,000 | 2,685,035 | 5,100,000 | 5,098,281 | -89.88 |
| 13 | அபிவிருத்தி அடைந்து வரும் பிராந்திங்களின் அடிப்படை சமூக சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம் (இலங்கை (அரசாங்கம்/ ஜய்கா) | - | - | 810,000 | - | - |
| 14 | திட்டமிடல்,கண்காணிப்பு மற்றும் மீளாய்வு (ஐ.நா.சி.நி ) | - | - | 6,650,000 | 6,500,000 | - |
| 15 | சுனத்தொகை மற்றும் அபிவிருத்தி (ஐ.நா.ச.நி) | | | 3,000,000 | 2,234,622 | |
| | **மோத்தம்** | **178,944,000** | **176,802,748** | **162,737,000** | **157,357,928** | **10.99** |